

# நாளை தொடங்கி கோலாலம்பூரில்

# போக்குவரத்து குற்றங்களுக்கு புதிய அபராதம்

## டிபிகேஎல் அறிவிப்பு

கோலாலம்பூர், ஜூன் 30-

நாளை ஜூலை முதலாம் தேதி தொடங்கி கோலாலம்பூரில் புரியும் போக்குவரத்துக் குற்றங்களுக்கு புதிய அபராதத் தொகை விதிக்கப்படும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) நேற்று கூறியது.

1987ஆம் ஆண்டு சாலைப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் உள்ள அனைத்து போக்குவரத்துக் குற்றங்களுக்கும் இப்புதிய அபராதம் விதிக்கப்படும் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

மோட்டார் சைக்கிள்களுக்கான போக்குவரத்துக் குற்றங்கள் பற்றி கூறிய அந்த அறிக்கை, அதனை 15 நாட்களுக்குள் செலுத்தினால் 30 ரிங்கிட்டும் 16 முதல் 30 நாட்களுக்குள் அதனைச் செலுத்தினால் 50 ரிங்கிட்டும் 31 முதல் 60 நாட்களுக்குள் அதனைச் செலுத்தினால் 80 ரிங்கிட்டும் அபராதமாக விதிக்கப்படும். அதேவேளையில், கார்களுக்கான போக்குவரத்து

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

**நாளை தொடங்கி கோலாலம்பூரில்...**

குற்றங்கள் குறித்து விளக்கிய அந்த அறிக்கை, 15 நாட்களுக்குள் அதனை செலுத்தினால் 50 ரிங்கிட்டும் 16 முதல் 30 நாட்களுக்குள் அதனை செலுத்தினால் 80 ரிங்கிட்டும் 31 முதல் 60 நாட்களுக்குள் அதனை செலுத்தினால் 100 ரிங்கிட்டும் அபராதமாக விதிக்கப்படும் எனவும் அந்த அறிக்கை கூறியது.

அதேவேளையில், கனரக வாகனங்களுக்கான அபராதத் தொகையை 15 நாட்களுக்குள் செலுத்தினால் 200 ரிங்கிட்டை அபராதத் தொகையாக செலுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கை கூறியது.